# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | | |
|---|---|---|---|
| Depositions of Witness for | Prosecution | Pw | 15 |
| | Defence | | |
| | Court | | |

Name : திரு.முருகன்
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of September 2024.

(A1 to A5 present)

**முதல் விசாரணை**

நான் அச்சன்புதூரில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுகிறேன். கடந்த 07.09.2015 ஆம் தேதி மாலை 05.00 மணிக்கு அச்சன்புதூர் காவல்நிலைய டீக்கடையில் நானும் பரமசிவன் என்பவரும் நின்றுகொண்டிருந்தோம். அப்போது அச்சன்புதூர் காவல் ஆய்வாளர் எங்கள் இருவரையும் காவல்நிலையத்திற்கு அழைத்தார். நாங்கள் இருவரும் காவல்நிலையத்திற்கு சென்றோம். அப்போது காவல்நிலையத்தில் மேல சொக்கம்பட்டியை சேர்ந்த ராமர் என்ற நபரை போலீசார்

விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அச்சன்புதுரை சேர்ந்த சண்டியர் (எ) ராஜகோபாலை தானும், மேலும் 4 நபர்களும் சேர்ந்து தலையை துண்டித்து கொலை செய்ததாக தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். காவல் ஆய்வாளர் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவுசெய்துகொண்டார். அதில் நானும் பரமசிவனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலம் தான் என்னிடம் காட்டப்படுவது. அதிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ. 9** ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நாங்கள் காவல்நிலையத்திற்குள் போகும் போது, போலீசார் எதிரிகளை காவல்நிலையத்திற்குள் வைத்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். ஆய்வாளர் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்ததன் பேரில் அங்குசென்றோம். சம்பவ காலகட்டத்தில் நான் சென்டிரிங் வேலை செய்துகொண்டிருந்தேன், ஆட்டோ ஓட்டவில்லை. என்னை காவல் ஆய்வாளர் நான் டீக்கடையில் டீக்குடித்துக்கொண்டிருந்தபோது, நேரில் அழைத்தார். ஆய்வாளர் தவிர்த்து அப்போது 5–6 காவலர்கள் காவல்நிலையத்தில் இருந்தார்கள். எதிரி சொல்ல சொல்ல எந்த காவலர் அதை கைப்பட எழுதினார் என்றால் கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்யப்பட்டது. அதை தட்டச்சு செய்து முடிப்பதற்கு சுமார் 1 மணி நேரம் ஆனது என்றால் சரிதான். தட்டச்சு செய்யப்பட்ட 6 பக்கங்களில் உள்ள விவரங்கள் அனைத்தையும் என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். எந்தெந்த பக்கங்களில் என்னென்ன விவரங்கள் உள்ளன என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் இதுசம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் இன்று தான் மேற்படி விவரங்களை முதன்முறையாக சொல்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் 07.09.2015 ஆம் தேதி மாலை 05.00 மணிக்கு அச்சன்புதூர் காவல்நிலைய டீக்கடையில் நானும் பரமசிவன் என்பவரும் டீக்குடித்துக்கொண்டிருந்தபோது, காவல் ஆய்வாளர் அழைத்ததாக சொல்வதும், அதன்பேரில் நாங்கள் காவல்நிலையம் சென்றபோது ராமர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக சொல்வதும் அதில் நானும் பரமசிவனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அச்சன்புதூர் காவல்நிலையம் அருகே டீக்கடை இருப்பதாக சொல்வது உண்மையல்ல

என்றால் சரியல்ல. நானும் பரமசிவனும் காவல்நிலைய கையிருப்பு சாட்சிகள் என்றும், போலீசார் தயார் செய்த ஆவணங்களில் கையெழுத்து போட்டுக்கொடுத்து, அதற்கேற்றார்போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் ராமர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக சொல்வதும், அது கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்யப்படுவதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 16 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.மாரியப்பன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of September 2024.

(A1 to A5 present)

**முதல் விசாரணை**

நான் அச்சன்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நானும் சண்முகையா பாண்டியன் என்பவரும் சிவராமன்பேட்டையில் வேலை விஷயமாக போய்விட்டு அச்சன்புதூருக்கு வந்துகொண்டிருந்தோம். அப்போது சிவராமன்பேட்டை பிள்ளையார் கோவில் அருகே போலீசார் எங்களை மறித்து விசாரணை செய்தார்கள். அப்போது ஒரு நபர் ரோட்டில் போலீசார் நிற்பதை பார்த்து ஓட முற்பட்டவரை போலீசார் துரத்தி சென்று

மடக்கிபிடித்து விசாரித்தார்கள். அப்போது அந்த நபர் தனது பெயர் முருகையா பாண்டியன் என சொன்னார். மேலும், முருகையாபாண்டியன் தானும், தன்னுடன் சிலரும் சேர்ந்து அச்சன்புதூரை சேர்ந்த சண்டியர் (எ) ராஜகோபாலை தலையை துண்டித்து கொலை செய்ததாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும் வாசுதேவன் (எ) சண்முகைய்யா பாண்டியனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். முருகைய்யா பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் தான் என்னிடம் காட்டப்படுவது. அதிலுள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த **முதலாவது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.10** ஆகும். மேற்படி முருகைய்யா பாண்டியனிடமிருந்து போலீசார் ஒரு அத்தாட்சி பிறப்பித்து அரிவாளை கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியிலும் நானும் வாசுதேவன் (எ) சண்முகைய்யா பாண்டியனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எங்கள் ஊரிலிருந்து போலீசார் எங்களை நிறுத்தி விசாரித்த இடம் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நானும் வாசுதேவன் (எ) சண்முகைய்யா பாண்டியனும் ஒரே ஊர்க்காரர்கள் தான். நானும் வாசுதேவன் (எ) சண்முகைய்யா பாண்டியனும் இருசக்கர வாகனத்தில் ஒன்றாக வந்தபோது, ஆய்வாளர் எங்களை மறித்து ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று விசாரித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தை ரோட்டில் வைத்து கைப்பட எழுதினார்கள். நாங்கள் சிறிது தள்ளி நின்றோம். எதிரி காவல் ஆய்வாளரிடம் 1மணி நேரம் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்டபிறகு இன்று தான் முதல் முறையாக மேற்படி விவரத்தை சொல்கிறேன் என்றால் சரிதான். நானும் வாசுதேவன் (எ) சண்முகைய்யா பாண்டியனும் இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொல்வதும், அப்போது போலீசார் எங்களை மறித்ததாகவும், அந்த சமயம் எதிரி முருகைய்யா பாண்டியன் வந்ததாக சொல்வதும் அவரை போலீஸ் பிடித்து விசாரித்ததாக சொல்வதும் அப்போது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வதும், அதில் நானும் வாசுதேவன் (எ) சண்முகைய்யா பாண்டியனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டதாக சொல்வதும் அதன் அடிப்படையில் அரிவாள்

கைப்பற்றப்பட்டதாக சொல்வதும், அத்தாட்சி தயார் செய்யப்பட்டதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நாங்கள் போலீசாரின் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 17 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.வாசுதேவன் (எ) சண்முகைய்யா பாண்டியன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of September 2024.

(A1 to A5 present)

**முதல் விசாரணை**

நான் அச்சன்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். கடந்த 2015 ஆம் வருடம் நானும் மாரியப்பன் என்பவரும் சிவராமன்பேட்டையில் வேலை விஷயமாக போய்விட்டு அச்சன்புதூருக்கு வந்துகொண்டிருந்தோம். அப்போது சிவராமன்பேட்டை பிள்ளையார் கோவில் அருகே போலீசார் எங்களை மறித்து விசாரணை செய்தார்கள். அப்போது ஒரு நபர் ரோட்டில் போலீசார் நிற்பதை பார்த்து ஓட முற்பட்டவரை போலீசார் துரத்தி சென்று மடக்கிபிடித்து

விசாரித்தார்கள். அப்போது அந்த நபர் தனது பெயர் முருகையா பாண்டியன் (எ) சுப்பையா பாண்டியன் என சொன்னார். மேலும், முருகையாபாண்டியன் தானும், தன்னுடன் சிலரும் சேர்ந்து அச்சன்புதூரை சேர்ந்த சண்டியர் (எ) ராஜகோபாலை தலையை துண்டித்து கொலை செய்ததாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அப்போது ஒரு நபர் தப்பிவிட்டான், அவனை மீண்டும் கொலை செய்ய தான் செல்வதாக போலீசாரிடம் சொன்னார். முருகையா பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவுசெய்துகொண்டார். அதில் நானும் மாரியப்பனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். முருகையா பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் தான் என்னிடம் காட்டப்படுவது. அதிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த இரண்டாவது **சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.11** ஆகும். மேற்படி முருகையா பாண்டியனிடமிருந்து போலீசார் ஒரு அத்தாட்சி பிறப்பித்து அவரிடமிருந்து அரிவாளை கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியிலும் நானும் மாரியப்பனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நானும் மாரியப்பனும் வந்ததாக சொல்லும் இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது, அதன் பதிவெண் TN-76-S-5989 ஆகும். பதிவெண் என்னவென்று அப்போதே ஆய்வாளருக்கும் தெரியும் என்றால் சரிதான். வாகனம் எனது தங்கையின் கணவர் பெயரில் உள்ளது. அவரது சொந்த ஊர் தலைவன் கோட்டை ஆகும். 1மணி நேரத்தில் வாக்குமூலத்தை பதிவுசெய்துவிட்டார்கள். என்னிடம் ஆய்வாளர் பேசிக்கொண்டிருந்தபோது, எதிரி ஓடிவிட்டார், அவரை ஆய்வாளர் துரத்தி பிடிக்கசென்றார். அப்போது 4 போலீசார் அங்கிருந்தார்கள். அங்கு செக்போஸ்ட் போட்டு வாகனங்களை சோதனை செய்தார்கள். விரட்டி பிடித்தவரை வண்டியில் ஏற்றி அழைத்து சென்றுவிட்டார்கள். எதிரியிடமிருந்து அரிவாளை கைப்பற்றி அதன்பிறகு தான் எதிரியை அழைத்து சென்றார்கள். முதல் விசாரணை சங்கதிகளை இன்று தான் சொல்கிறேன் என்றால் சரிதான். நான் இதற்கு முன்னர் அச்சன்புதூர் காவல்நிலைய வழக்குகளில் சாட்சி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் எங்களை தவிர்த்து மேலும் 2 வாகனங்களை நிறுத்திபோலீசார் சோதனை செய்தார்கள். எங்களுக்கு முன்னர் 2 நபர்களை போலீசார் விசாரித்தார்கள். எங்களை நிறுத்திய பிறகு

அவர்களை அனுப்பிவிட்டார்கள், அதன்பிறகு வாகன சோதனையில் வேறு யாரையும் நிறுத்தவில்லை. ஓடிய எதிரியை அதற்கு முன்னர் நான் பார்த்தது கிடையாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் பொய் என்றாலும், நான் அச்சன்புதூர் காவல்நிலைய கையிருப்பு சாட்சி என்றும், போலீசார் எதிரியை விசாரிக்கவில்லை என்றும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | | |
|---|---|---|---|
| Depositions of Witness for | Prosecution | Pw | 18 |
| | Defence | | |
| | Court | | |

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பேச்சித்தேவர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of September 2024.

(A1 to A5 present)

**முதல் விசாரணை**

நான் பண்பொழியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்துவருகிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான், அது எந்த தேதி எதற்காக போட்டேன் என்பது எனக்கு நினைவில்லை. **பார்வை மகசரில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.12** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 18.08.2016 ஆம் தேதி மாலை 04.00 மணியளவில் நானும் சுடலைக்கனி என்பவரும் காவல் ஆய்வாளர் ராஜகோபால் (எ) சண்டியர் என்பவரின் கொலை வழக்கு தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் சுடலைக்கனியும் சாட்சிகளாக கையெழுத்து போட்டுவிட்டு, தற்போது எதிரிகளுக்கு காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

Depositions of Witness for Prosecution Pw 19
Defence
Court

Name : திரு.சுடலைக்கனி
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of September 2024.

(A1 to A5 present)

**முதல் விசாரணை**

நான் பண்பொழியில் கோட்டைதிரடு பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்துவருகிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது கிடையாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 18.08.2016 ஆம் தேதி மாலை 04.00 மணியளவில் நானும் பேச்சித்தேவர் என்பவரும் காவல் ஆய்வாளர் ராஜகோபால் (எ) சண்டியர் என்பவரின் கொலை வழக்கு தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் பேச்சித்தேவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டுவிட்டு, தற்போது எதிரிகளுக்கு காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

Depositions of Witness for Prosecution Pw 20
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மணிகண்டன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of September 2024.

(A1 to A5 present)

**முதல் விசாரணை**

நான் திருநெல்வேலி, கீழநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பிளம்பிங் வேலை செய்கிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் இன்னொரு நபர் கையெழுத்து போட்டார், அவர் பெயர் எனக்கு தெரியாது, ஆனால் அவர் பக்கத்து ஊரை சேர்ந்தவர். **பார்வை மகசரில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ. 13** ஆகும். அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து

என்னுடையது தான். **அத்தாட்சியில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ. 14** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, போலீசார் இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன ராஜகோபால் (எ) சண்டியரின் தலையில்லாத உடல் கிடந்த இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் பண்டாரம் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும், போலீசார் தயார் செய்த அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | | |
|---|---|---|---|
| Depositions of Witness for | Prosecution | Pw | 21 |
| | Defence | | |
| | Court | | |

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பண்டாரம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of September 2024.

(A1 to A5 present)

**முதல் விசாரணை**

நான் திருநெல்வேலி, கீழநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் கீழநத்தம் பகுதியில் போலீசார் விசாரணை செய்துகொண்டிருந்தபோது, என்னிடம் ஒரு கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. **பார்வை மகசரில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ. 15** ஆகும். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான்.

**அத்தாட்சியில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ. 16** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, போலீசார் இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன ராஜகோபால் (எ) சண்டியரின் தலையில்லாத உடல் கிடந்த இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் மணிகண்டன் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும், போலீசார் தயார் செய்த அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 22 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.சத்தியக்கனி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of September 2024.

(A1 to A5 present)

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். தள்ளுவண்டி வியாபாரம் செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அதை எதற்காக எந்த தேதியில் போட்டேன் என்று எனக்கு நியாபகமில்லை. **பார்வை மகசரில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ. 17** ஆகும்.போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, போலீசார் இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன ராஜகோபால் (எ) சண்டியரின் உடல் இல்லாத தலை கிடந்த இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் விஸ்வநாதன் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும், போலீசார் தயார் செய்த அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 745/2017**

| | | | |
|---|---|---|---|
| Depositions of Witness for | Prosecution | Pw | 23 |
| | Defence | | |
| | Court | | |

Name : திரு.விஸ்வநாதன்
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of September 2024.

(A1 to A5 present)

**முதல் விசாரணை**

நான் திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். தள்ளுவண்டி வியாபாரம் செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அதை எதற்காக எந்த தேதியில் போட்டேன் என்று எனக்கு நியாபகமில்லை. **பார்வை மகசரில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ. 18** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, போலீசார் இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன ராஜகோபால் (எ) சண்டியரின் உடல் இல்லாத தலை கிடந்த இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் சத்தியக்கனி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும், போலீசார் தயார் செய்த அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi